பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 07 2025 **WEDNESDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி ஐந்து நாடுகள் பயணத்தின் நிறைவாக இன்று நமீபியா செல்கிறார்.

2. இந்தியா – பிரேசில் இடையே பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் வகையில் நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

3. விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

4. தில்லி அரசு பள்ளிகளில் தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் ஸ்மார்ட் வகுப்பறைகளை ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

5. விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் பெலாரசின் **Aryna Sabelenka** அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*<u>-- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<<>>>>>

ரதமர் திரு நரேந்திர மோடி தமது ஐந்து நாடுகள் சுற்றுப்பயணத்தின் நிறைவாக பிரேசிலியாவிலிருந்து நமீபியா புறப்பட்டு சென்றார்.

அந்நாட்டு அதிபரின் அழைப்பை ஏற்று நமீபியா செல்லும் பிரதமருக்கு அந்நாட்டு ராணுவ அணிவகுப்புடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு பின்னர் நமீபியா செல்லும் முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையை பிரதமர் திரு நரேந்திர மோடி பெறுகிறார்.

தொடர்ந்து நடைபெறும் இந்தியா – நமீபியா இடையே பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தையில் அந்நாட்டுடன் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நமீபியா நாட்டின் உயரிய விருதும் பிரதமருக்கு வழங்கப்பட உள்ளது.

முன்னதாக, பிரேசில் அதிபர் திரு **'Luiz Inacio Lula da Silva'**-வை, பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

இதைத்தொடர்ந்து, பிரேசிலியாவில் அந்நாட்டு அதிபருடன் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்த பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரேசில் உடனான வர்த்தகத்தை அடுத்த ஐந்தாண்டுகளில் 20 பில்லியன் டாலராக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இந்திய ஏற்றுமதியாளர்கள் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, அந்நாட்டுடன் வர்த்தக ஒப்பந்தத்தை விரிவுபடுத்துவதற்கு இருநாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து ஆலோசித்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் யுபிஐ டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை சேவையை பிரேசில் நாட்டில் செயல்படுத்துவதற்கான திட்டத்தையும் திரு நரேந்திர மோடி வெளியிட்ட அறிக்கையில் உறுதி செய்துள்ளார்.

மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப்பொருள் ஏற்றுமதி, வேளாண் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இருநாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் தாம் பேச்சு நடத்தியதாக அதில் கூறியுள்ளார்.

முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு பிரேசில் நாட்டின் உயரிய விருதான **'Grand Collar of the National Order of the Southern Cross '** என்ற விருதை அந்நாட்டு அதிபர் வழங்கி கௌரவித்தார்.

இதற்காக, பிரதமர் திரு நரேந்திர மோடி, நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இருதரப்பு நல்லுறவுகளை வலுப்படுத்துவதற்கு பிரதமரின் பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்படுவதாக அந்நாட்டு அதிபர் தெரிவித்தார்.

மேலும், பஹல்காம் தீவிரவாத தாக்குதலை பிரேசில் கண்டித்ததுடன், அதன் பின்னர் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைக்கு ஆதரவு அளித்ததற்காக அந்நாட்டு அதிபருக்கு பிரதமர் தமது நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

தமது இந்த சந்திப்பு குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், ரியோடிஜெனிரோவில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்றதும், தற்போது அதிபருடனான இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தியதும் ஆக்கப்பூர்வமான வகையில் அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இருதலைவர்களின் சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கிழக்கத்திய நாடுகளுக்கான வெளியுறவு அமைச்சக செயலாளர் திரு குமரன், பிரேசில் நாட்டிற்கு இந்திய மருந்துப்பொருட்கள் இறக்குமதியை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை அந்நாட்டு அதிபர் வரவேற்றதாக கூறினார்.

சுற்றுலாப்பயணிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு விசா நடைமுறைகளை எளிமைப்படுத்துவது தொடர்பாகவும் பிரதமரும், பிரேசில் அதிபரும் ஆலோசனை நடத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

இருதலைவர்களின் சந்திப்புக்கு பின்னர் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, எத்தனால் கலந்த உயிரி எரிபொருள் உள்ளிட்ட துறைகளில் நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டதாகவும் திரு குமரன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில் சர்தார் வல்லபாய் பட்டேல் வேளாண் பல்கலைக்கழகத்தில் புதிய தொழில்நுட்ப மையத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கவும், விளைப்பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்யவும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பங்கு அவசியமாகிறது என்றும் கூறினார்.

வேளாண் துறையில் இந்த தொழில்நுட்பத்திற்காக **‘Ropar ’** ஐ ஐ டி-ல் சிறப்பு மையம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் ஆராய்ச்சி மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு ஏதுவாக, இந்த பல்கலைக்கழகத்தில் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்படும் என்றும் திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய இணையமைச்சர்கள் திரு ஜெயந்த் சௌத்ரி, திரு சூரிய பிரதாப் சாஹி ஆகியோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனமான **EPFO** அதன் 96 சதவீத உறுப்பினர்களுக்கு சென்ற நிதியாண்டிற்கான வட்டித் தொகையை வரவு வைத்திருப்பதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நான்கு கோடி உறுப்பினர்களில் இதுவரை மூன்று கோடியே 20 லட்சம் பேருக்கு வட்டித் தொகை வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

எஞ்சியுள்ள ஊழியர்களுக்கும், அவர்களின் கணக்கில் விரைவில் வட்டி வரவு வைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தை அறிவித்த இரண்டு மாதங்களில் தமது அமைச்சகம் இந்த நடைமுறையை நிறைவு செய்திருப்பதாக திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<<>>>>>

தில்லி அரசு பள்ளிகளில் தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் ஸ்மார்ட் வகுப்பறைகளை ஏற்படுத்த அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்திற்கு பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய கல்வி அமைச்சர் திரு ஆஷிஷ் சூட், தேசிய கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கில் இந்த வகுப்பறைகள் அமைக்கப்பட உள்ளதாக கூறினார்.

முதலமைச்சர் ஸ்ரீ பள்ளிகளில் 2 ஆயிரத்து 446 அதிநவீன கரும்பலகைகள் அமைக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஒன்பதாம் வகுப்பு முதல், 12-ஆம் வகுப்பு வரையில் 18 ஆயிரத்து தொள்ளாயிரத்து 66 கூடுதல் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக திரு அஷிஷ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கர்நாடக மாநிலத்தில் லஷ்கர் இ தொய்பா தொடர்பான வழக்கு குறித்து தேசிய புலனாய்வு அமைப்பினர் நடத்திய சோதனையில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மனநல மருத்துவர் ஒருவரும், ஆயுதப்படை காவலர் ஒருவரும் அடங்குவர் என்று என் ஐ ஏ வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரு மற்றும் கோலார் மாவட்டங்களின் ஐந்து இடங்களில் சோதனை நடத்தப்பட்டதாகவும், இதில் மின்னனு பொருட்கள், தங்கம் மற்றும் ரொக்கப்பணம் உள்ளிட்டவையும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 107-ஆக அதிகரித்துள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கு தொடர்பான சம்பவங்களில் 41 பேர் மாயமாகியுள்ளதாகவும் அங்கிருந்து வரும் ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

காணாமல் போனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், அந்த செய்திகள் மேலும் கூறுகின்றன.

<<<<<<>>>>>

காஸாவில், இஸ்ரேல் தாக்குதல் நீடித்துவரும் நிலையில், அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப், இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகுவை மீண்டும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 60 நாட்கள் சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏறக்குறைய முடிவடையும் தருவாயில் உள்ளதாகவும் இந்த சூழலில் இரு தலைவர்களின் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றும் திரு ட்ரம்பின் மத்தியக்கிழக்கு நாடுகளுக்கான தூதர் திரு ஸ்டீவன் தெரிவித்துள்ளார்.

இருதலைவர்களும் வெள்ளை மாளிகையில் இரவுநேர விருந்தில் பங்கேற்றதாகவும், பேச்சுவார்த்தை குறித்த விவரம் வெளியாகவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

<<<<<<>>>>>

பாகிஸ்தானின் **Khyber Pakhtunkhwa** மாகாணத்தில் உள்ள கொச்சி பசார் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு தீயணைப்பு வீரர்கள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

மக்கள் நெரிசல் மிகுந்த இந்த வர்த்தகப்பகுதியில் அமைந்துள்ள ஒரு வீட்டில் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக அம்மாகாண காவல்துறை தெரிவித்துள்ளது.

தீயணைப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் அந்த வீட்டில் இருந்த ஆறு பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

சட்டீஸ்கர், கொங்கன், கோவா, மகராஷ்ட்ராவின் மத்தியப்பகுதி, மத்தியப்பிரதேசம் மற்றும் விதர்பா பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், ஹரியானா, சண்டிகர், தில்லி, இமாச்சலப்பிரதேசம், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் ஒரு சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே, தமிழகத்தின் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலும் நேற்றிரவு பரவலாக மழை பெய்துள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனையான பெலாரசின் **'Aryna Sabelenka '** அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

லண்டனில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் , 4-6, 6-2, 6-4 என்ற செட் கணக்கில், ஜெர்மனியின் **'Laura Siegemund** -ஐ வென்றார்.

அரையிறுதியில் **Aryna Sabelenka**, அமெரிக்க வீராங்கனை **Amanda Anisimo**-வை எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி போட்டியில், ஸ்பெயினின் **'Carlos Alcaraz '** 6-2, 6-3, 6-3 என்ற செட் கணக்கில், பிரிட்டனின் **'Cameron Norrie** -ஐ வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இன்றைய அரையிறுதிப்போட்டியில், ஸ்பெயினின் **Carlos Alcaraz,** அமெரிக்க வீரர் **Taylor Fritz** -ஐ எதிர்கொள்கிறார்.

**<<<<<END<>>>>>**